**தங்காலை பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன் , அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.1,1.3.2 மற்றும் 1.3.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களில் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிரயாயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்த நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி நிலைமை கூற்றில் சொத்துகளில் மொத்தக் கூட்டுத் தொகை ரூபா 318,344,331 தொகை ஆக காணப்பட்டதுடன், பொறுப்புகள் மற்றும் உரிமைகளின் கூட்டுத்தொகை ரூபா 326,572,933 தொகையாக காணப்பட்டது அதன் பிரகாரம் ரூபா 8,228,602 இற்கு வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறிப்பட்டன.

(i) திரண்ட நிதியம் மற்றும் பற்றாக்குறை கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் முறையே ரூபா 3,535,925 தொகை மற்றும் ரூபா 8,228,603 தொகை குறைவாக நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ii) ஆண்டிற்கான மிகை ரூபா 8,210 தொகை குறைவாக திரண்ட நிதியக் கணக்கிற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(iii) பொது பேரேட்டில் மூலதனச் சொத்துக்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு (104) செலவு கணக்கின் மீதி ரூபா 9,000 தொகை குறைவாகவும் சேவைகளுக்கான கட்டணக் கணக்கின் மீதி ரூபா 11,000 தொகை குறைவாகவும் வருமான செலவுக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொல்வனவு செய்திருந்த மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 803,021 கிரயத்தையுடைய இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ஹும்மான நிலைய நிர்மாண வேலைக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,694,176 இற்கான செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மஹவெல கொட வயல் வெளிக்கு நுழைபாதையில் வடிகால் முறைமை நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்கான கடன் கொடுத்தோர் மீதி ரூபா 999,410

தொகை மிகையாகவும், மீளாய்வாண்டிற்கான செலவு கடன் கொடுத்தோர் மீதி ரூபா 101,121 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மூலதன சொத்துக்களை உரித்தாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 172,271 இற்கான செலவு, மீண்டு வரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) அடுத்த வருடத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 50,000 இற்கு பிணை வைப்புக்கள், மீளாய்வண்டிற்கான கடன் கொடுத்தோர் மீதி ஒன்றென கணக்கீடு செய்திருந்தமையால் கடன்கொடுத்தோர் மீதி அதே தொகையால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்காக தங்காலை காணிப்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து மற்றும் 2017 ஆண்டின் இறுதி ஏழு மாதங்கள் தொடர்பாக ஹம்பாந்தோட்டை காணி பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற வேண்டிய முத்திரை கட்டண வருமானத்தை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத் கணக்குகள்

நிதிக் கூற்றுகளிலுள்ள 04 கணக்கு விடயங்களில் மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே அவதானிக்கப்பட்ட ரூபா 11.770,804 இற்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பல்வேறு கடன் கொடுத்தோர் மற்றும் நிர்மான வேலை கடன் கொடுத்தோர் ஆகியவற்றிற்காக ரூபா 8,347,092 தொகை செலுத்த வேண்டிக் காணப்படதுடன், 1 - 2 வருட வரையான கால வீச்சை சேர்ந்த மூன்று கடன் கொடுத்தோர் ரூபா 387,800 தொகை செலுத்த வேண்டியிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 204,166,909 தொகைக்கான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்று செய்யவதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களும் தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணக்கமின்மைகள் |
| --- | --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | விதி 5 (8) | | சபை வளவிற்கு வெளி இடமொன்றில் பாதை செப்பனிடு உருளை நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த சந்தர்பத்தில் அது விபத்துக்கு உள்ளாகியிருந்தது |
| (ii) | விதி 150 | | மீளாய்வாண்டிற்கான பொழிப்பு காசேடு தயாரித்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 103(1)(அ), 104(1), 104(3), 104(4) மற்றும் 110 | 1,510,250 | அதிர்வு பாதை தகர்கும் இயந்திர்திற்கு ஏற்பட்டிருந்த விபத்து மற்றும் ஹுூம்மான சுற்றாடல் நிலையத்தின் சிட்டைகள் அழிவடைதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | பொது நிருவாக சுற்றறிக்கை | | |
| | (i) 2008 திசெம்பர் 31 திகதிய 30/2008 இலக்க சுற்றறிக்கை | | அலுவலர் ஒருவருக்கு வழங்க கூடிய உச்ச மட்ட கடன் மீதியை மிகைத்து சபையின் பெண் உத்தியோகத்தர் இருவருக்கு இடர் கடன் கொடுக்கப்பட்டிருந்தது. |
| | (ii) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்க சுற்றறிக்கை | | 2017 அக்தோபர் 31 திகதி அளவிலும் சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்திருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 திகதி IAI/2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | | சபைக்கு சொந்தமான கனிணிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,778,674 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,344,124 தொகை ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுபாடு**

-----------------------------

1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 155 காட்டப்பபடடுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பிரதான காசேடு தயாரித்து இருக்காமையால் 08 வங்கி நடைமுறை கணக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 13,635,329 இற்கான மீதியின் உண்மை தன்மையை உறுதிபடுத்த முடியாதிருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 8,095,500 | 6,219,053 | 6,310,576 | 275,361 | 11,115,000 | 6,816,354 | 6,815,386 | 142,284 |
| (ii) வாடகை | 11,967,900 | 8,865,155 | 9,416,195 | 1,461,184 | 13,348,000 | 5,457,478 | 5,319,704 | 2,175,964 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணம் | 2,446,700 | 4,097,079 | 4,097,079 | - | 3,561,000 | 2,167,301 | 2,199,161 | - |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 19,554,500 | 16,055,937 | 13,514,765 | 75,187,020 | 34,643,000 | 34,299,461 | 48,955,964 | 72,466,733 |
| மொத்தம் | 42,064,600 | 35,237,224 | 33,338,615 | 76,923,565 | 62,667,000 | 48,740,594 | 63,290,215 | 74,784,981 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 35,237,224 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டின் போது நிலுவை வருமானம் உட்பட ரூபா 33,338,615 தொகை சேகரிக்கப்பட்டிருந்து கடந்த ஆண்டு இறுதியில் ரூபா 74,784,981 தொகையாக காணப்பட்ட மொத்த நிலுவை மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 76,923,565 தொகை வரை வளர்ச்சியடைந்து இருந்தது.

### 2.3.3 வீத வரியும் வரியும்

**(அ) வீதவரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134 (1) இன் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் வீத வரிக்காக பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்யும் அலுவல்கள் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் பூர்த்தியடைந்திருக்கவில்லை

**(ஆ) ஏக்கர் வரி**

மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 150,471 இற்கு நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1) (அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.4 வாடகை

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட ரூபா 1,443,524 தொகையான வாடகைத் தொகையை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.5 ஏனைய வருமானங்கள்

**வியாபார வரி**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வியாபார வரியின் கூட்டுத்தொகை ரூபா 124,890 தொகை காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 40,950 தொகை 2014 ஆண்டிற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

தென்மாகாண சபையிலிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதி வரை நீதி மன்ற தண்டப் பணம் ரூபா 4,691,736 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 70,369,719 பெற வேண்டிக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கள் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலன்புரி என்பன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறிப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

(i) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டம், பௌதீக மற்றும் நிதி செயலாற்றுகையை இனங்காணக்கூடியவாறு தயாரித்திருக்கவில்லை.

(ii) அதிகார பிரதேசத்தை இனங்காணும் மற்றும் நுழைவும் பலகைகள் பொருத்துவதற்காக மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் ரூபா 1,000,000 இற்கான ஏற்பாடு ஒன்று ஒதுக்கியிருந்த போதிலும், அதனை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) ஏற்பாடுகள் மேற்கொள்ளாமை**

தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய 11 செய்பணிகளுக்காக பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

**(இ) நிறைவேற்றப்படாத செய்பணிகள்**

மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தின் மூலம் செயற்படுத்துவதற்கு பாதீட்டின் மூலம் கூட்டுத்தொகை ரூபா 2,160,000 இற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்த 05 கருமங்கள் மற்றும் மூலதன உதவிகளின் மூலம் செயற்படுத்துவதற்கு கூட்டுத்தொகை ரூபா 6,100,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த 04 செய்பணிகள் ஆண்டின் போது நிறைவேற்றி இருக்கவில்லை.

**(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகமைத்துவம்**

(i) குப்பை போடப்படும் நிலத்தை சுற்றி பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பாரிய செலவு ஒன்று மேற்கொண்டு பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பையை சேகரித்து இருந்த போதிலும் சேகரிக்கப்படும் குப்பையினை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) திண்ம கழிவுப் பொருள் மீள்சுழற்சி செயற்திட்டத்திற்காக சுற்றாடல் சார் விதப்புரை பெற்றுக் கொள்வதற்காக 2018 மே 25 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றம் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசதத்தில் பொது மக்களின் வாழ்க்கை தரத்தை மற்றம் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்ட கால திட்டங்கள் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

### 3.2.1 வீதி விளக்கு பராமரிப்பு

2010 ஆகஸ்ட் 17 திகதி டீஈ/01/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகளின் எண்ணிக்கை, இலங்கை மின்சார சபையினால் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் சபை நிதியத்தில் இருந்து பராமரிக்கப்படும் 2345 வீதி விளக்குகளில் 2028 இற்கான கட்டணம் மீளளிப்பு செய்திருக்கவில்லை.

### 3.2.2 தகவல்கள் முகாமைத்துவ முறைமை ஒன்று கொள்வனவு செய்தல்

களஞ்சிய இருப்பு, மோட்டார் வாகன தகவல்கள், நாளாந்த தபால் மற்றும் பலவின வருமான முகாமைத்துவ முறைமையை கொள்வனவு செய்வதற்காக 2016 ஆண்டில் செலுத்தியிருந்த ரூபா 229,250 இற்காக முற்பணத் தொகையில் ரூபா 145,000 இற்கான நாளாந்த தபால் முகாமைத்துவ முறைமை மாத்திரம் பெற்றிருந்ததுடன், சேவைகள் பெற்றுக்கொள்ளாத கருமங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 84,250 இற்கான பெறுமதியினை திருப்பி அறவீடு செய்வதற்கு 2018 ஏப்ரல் 30 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணியில் 24 பதவிகள் தொடர்பாக 53 பேர் மிகையாகவும் மற்றும் 04 பதவிகள் தொடர்பாக 08 பேரின் வெற்றிடங்களும் காணப்பட்டன.

(ஆ) சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர் 07 பேர் அவர்களுக்கு உரிய பதவிகளுக்கான கடமைகளில் ஈடுபடுத்தாமல் வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) மோட்டார் கிரேடர் செலுத்துவதற்கு ஒரு நாளைக்கு 04 மணித்தியாலங்களை மிகைத்து கடமையாற்றி மொத்த காலத்திற்குமாக சாரதிக்கு ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 50 மற்றும் சாரதி உதவியாளருக்கு ரூபா 40 வீதமும் ஆக ரூபா 85,520 தொகையொன்று முறையான அங்கீகாரம் ஒன்று இன்றி ஊக்குவிப்புக் கொடுப்பனவு என செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

பிரதேச சபையினால் பயன்படுத்தப்படும் 51 காணிகள் மற்றும் கட்டிடங்களின் சட்டரீதியான உரிமையினை சபைக்கு உரித்தாக்குவதற்கு மீளாய்வண்டு இறுதிவரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4.2 விளைவற்ற சொத்துக்கள்

2005 ஆண்டு முதல் செயற்படாத நிலையில் சபையின் வளவில் காணப்படும் கப் வண்டி ஒன்றினை அகற்றுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4.3 வாகன பாவணை

#### (அ) வாகனங்களின் உரிமையை உரித்தாக்காமை

பல்வேறு நிறுவனங்களில் இருந்து சபைக்கு கிடைத்திருந்த 06 வாகனங்களின் சட்டரீதியாக உரிமையயை சபைக்கு உரித்தாக்குவதற்கு 2017 அக்தோபர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### (ஆ) வாகன விபத்து

நிலம் தகர்க்கும் அதிர்வு இயந்திரத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்தினால் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்காக காப்புறுதி நிறுவனத்திற்கு மீளளிப்பு செய்யப்படாத ரூபா 24,037 இற்கான தொகையினை பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

(அ) பிரதேச சபை நிதியத்திலிருந்து 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த இடை சொருகல் துண்டுக் கற்கள் பரப்பட்ட 11 பாதைகளில் 2017 திசெம்பர் 09 திகதி தரப் பரிசோதனைக்காக சமர்பித்திருந்த 150 கற்களில் 136 உம் உரிய தரத்தில் காணப்படவில்லை என தரப் பரிசோதனை பெறுபேறுகளின் மூலம் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த பாதைகள் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட ரூபா 8,396,237 இற்கான தொகை பலனற்ற கொடுப்பனவு ஒன்றென அவதானிக்கப்பட்டது.

#### (ஆ) நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவு செய்தல்

ஏழு பாதைகளின் நிர்மாண வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது உண்மையாக நிர்மாணிக்கப்பட்ட வேலை அளவை விட கூடுதலான அளவுக்காக ரூபா 429,515 தொகை ஒன்று செலுத்தப்பட்டுள்ளது.

(இ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 101 இன் பிரகாரம் பணம் செலவிடுவதற்கான சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட வேண்டியிருந்த போதிலும் 5 பாதைகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 3,683,552 தொகை கொடுப்பனவு செய்யும் போது நிதி மற்றும் கொள்கை குழுவின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 35 பல்வேறு செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 1,185,000 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் வருட இறுதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஏழு வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 125,585,825 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 11 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) 06 செலவு விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 13,618,542 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 10 சதவீதம் முதல் 63 சவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்கம் முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது 02 குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | முறைமையின் குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்கு மீதிகள் கைவிடப்படல், மிகையாகவும் குறைவாகவும் கணக்கீடு செய்த சந்தர்ப்பங்கள் காணப்படல். |
| | (ii) கணக்குகள் சமப்படுத்த வழக் காணப்படல். |
| | (iii) பொழிப்பு காசேடு மற்றும் பிரதாக காசேடு தயாரித்திருக்காமை. |
| (ஆ) வருமான நிருவாகம் | (i) புதிதாக வீதவரி விதிக்கப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) நிலுவை வருமானம் அறவீடு செய்யாமை. |
| | (iii) புதிய வருமானம் உருவாக்கும் வழிகளை இனங்காண்பது தொடர்பாக கவனம் செலுத்தாமை. |
| (இ) வாகன கட்டுபாடு | (i) வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யாமை. |
| | (ii) வாகனங்களின் உரிமையை உரித்தாக்காமை. |
| (ஈ) ஒப்பந்த நிருவாகம் | (i) மதிப்பீடுகள் தயாரிக்கும் போது வேலை விபரங்கள் தெளிவாக காட்டப்படாமை மற்றும் கூறுவிலைகள் மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்ட தோற்றுவாயினை குறிப்பிட்டிருக்காமை. |
| | (ii) நிர்மான வேலைகள் நிறைவேற்றும் போது போதியளவு மேற்பார்வை ஒன்று செய்யாமை. |
| | (iii) நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவு செய்திருத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பாதீட்டு கட்டுபாடு | (i) | பாதீட்டு மற்றும் உள்ளவற்றின் வருமானங்கள் மற்றும் செலவுகள் இடையே கணிசமான முரண்கள் காணப்படல். |
| | | (ii) | பாதீட்டு இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கை எடுக்காமை. |